**செ.வெ.எண்:03/மே** **நாள்: 09.05.2021**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

கோவிட்-19, தருமபுரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவுதலை தடுக்கும் பொருட்டு கடந்த 24.3.2020 முதல் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுபடுத்தவும், தனி மனித சமூக இடைவெளியை பொதுமக்கள் பின்பற்றவும், முக கவசம் கட்டாயம் அணியவும் கடும் நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டம் -2005 -ன் படி தற்போது அமலில் உள்ள ஊரடங்கு மற்றும் இதர கட்டுப்பாடுகள் அனைத்தும் 01.05.2021 நள்ளிரவு 12.00 மணி முதல் மறு உத்திரவு வரும்வரையில் தொடர்ந்து நீட்டிப்பு செய்யப்படுள்ளது.

கொரோனா நோய் தொற்று பரவல் அதிகரித்து வரும் சூழலில் இந்நோய்த்தொற்றினை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது தமிழக அரசு பல்வேறு தளர்வுகள் மற்றும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலை தடுக்கும் நோக்கில் தருமபுரி மாவட்டத்தில் 10.05.2021 காலை 4.00 மணி முதல் 24.5.2021 காலை 4.00 மணி வரை முழு ஊரடங்கு உத்திரவு அமலில் இருக்கும் . முழு ஊரடங்கு நாட்களில் கீழ்கண்ட தளர்வுகள் மற்றும் கட்டுபாடுகள் அமலில் இருக்கும்.

- **தனியாக இயங்கும் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை கடைகளான காய்கறி, மளிகை, பழக்கடைகள், பலசரக்கு கடைகள், இறைச்சி மற்றும் மீன் விற்பனை கடைகள் மற்றும் தேனீர் கடைகள, மற்றும் பேக்கரிக்கள் ஆகியன நண்பகல் 12.00 மணிவரையில் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.**
- 3000 சதுர அடிக்கு மேல் உள்ள பெரிய கடைகள்(Big format shops) , வணிக வளாகங்கள் (Shopping Complex & Malls) இயங்க அனுமதி இல்லை. வணிக வளாகங்களில் இயங்கும் பலசரக்கு கடைகள், காய்கறிகடைகள் இயங்க அனுமதி இல்லை.
- டாஸ்மாக் கடைகள் திறக்க அனுமதியில்லை.
- அனைத்து உணவகங்களிலும் பார்சல் சேவை மட்டும் வழங்க அனுமதிக்கப்படுகிறது. கடைகளில் உட்கார்ந்து சாப்பிட அனுமதியில்லை. ஓட்டல்கள் மற்றும் லாட்ஜில் தங்கியுள்ளவர்களுக்கு (வணிக காரணம், மருத்துவம் சார்ந்த பணிகளுக்கு) அவர்கள் தங்கியுள்ள அறைகளிலேயே உணவு வழங்கப்படவேண்டும். உணவு கூடங்களில் அமர்ந்து உண்பதற்கு அனுமதி இல்லை. உணவகங்கள் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், மதியம் 12 மணி முதல் 3 மணிவரையிலும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பார்சல் சேவை அனுமதிக்கப்படும். Swiggy, Zomato போன்ற e-commerce மூலம் உணவு விநியோகம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.
- அனைத்து சலூன் கடைகள்/ அழகு நிலையங்கள் இயங்க அனுமதியில்லை.
- அனைத்து திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள், யோகா பயிற்சி நிலைங்கள், கேளிக்கைக் கூடங்கள், அனைத்து மதுக்கூடங்கள், உள்அரங்கங்கள், திறந்தவெளி அரங்கங்கள், சமுதாயம், அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்வி, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் இதர விழாக்களுக்கு அனுமதியில்லை.

- அத்தியாவசிய துறைகளான மருத்துவம், வருவாய்த்துறை, காவல் துறை, ஊர்காவல்படை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள், சிறைத்துறை, மாவட்ட நிர்வாகம், மாவட்ட தொழில்மையங்கள், மின்சாரம், குடிநீர், உள்ளாட்சித்துறைகள், வனத்துறை அலுவலகங்கள், கருவூலங்கள், சமூக நலன், மற்றும் மகளீர் உரிமைத்துறை அலுவலங்கள் தவிர மற்ற மாநில அரசு அலுவலகங்கள் இயங்க அனுமதியில்லை.
- அனைத்து தனியார் அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்கள் (IT, ITEs) இயங்க அனுமதியில்லை. வீட்டில் இருந்தபடியே பணியாற்றும் முறையை அவை பின்பற்றலாம்
- அனைத்து வழிப்பாட்டுத் தலங்களிலும் பொதுமக்கள் வழிபாட்டிற்கு அனுமதியில்லை. தினமும் நடைபெறும் பூஜைகள், பிரார்த்தனைகள்/ சடங்குகளை வழிபாட்டுத் தல ஊழியர்கள் மூலம் நடத்துவதற்கு அனுமதியில்லை. குடமுழுக்கு மற்றும் திருவிழாக்கள் நடத்த அனுமதியில்லை.
- சுற்றுலா தலங்கள்/ பூங்காக்களுக்கு அனுமதியில்லை.
- பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்கள் கோடைக்கால முகாம்கள் நடத்த அனுமதியில்லை.
- நீச்சல் குளங்கள்/ விளையாட்டு பயிற்சி சங்கம் செயல்பட அனுமதியில்லை.
- தனியார் , அரசு பேருந்து போக்குவரத்து மற்றும் வாடகை டாக்ஸி ஆட்டோக்கள் இயங்க அனுமதியில்லை. எனினும் அத்தியாவசிய பணிகளுக்கு பயணிப்பவர்கள் (திருமணம், இறப்பு, நேர்முக தேர்வு / வேலைவாய்ப்பு, மருத்துவமனை செல்வோர்) உரிய ஆவணங்களுடன் பயணிப்பவர்கள் அனுமதிக்கப்படுவர்.
- அம்மா உணவகம் தொடர்ந்து செயல்படும்.
- நடைபாதை காய்கறி மற்றும் பூ விற்பனை கடைகள் நண்பகல் 12 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.
- நியாய விலைக்கடைகள் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையில் செயல்படும்.
- நீதித்துறை மற்றும் நீதிமன்றங்கள் செயல்படும்
- கட்டுமான பணிகள் அனுமதிக்கப்படுகிறது.
- ஊடகம் மற்றும் பத்திரிக்கை துறையினர் தொடர்ந்து பணியாற்றலாம்.
- அரசு ஆணை 348ன்படி தொடர்செயல்முறை தொழிற்சாலைகள், மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. மற்ற அனைத்து தொழிற்சாலைகளும் செயல்பட அனுமதியில்லை. தொலைதொடர்பு மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகள் அனுமதிக்கப்படுகிறது.
- கிடங்குகளில் சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது மற்றும் சேமித்து வைப்பது போன்ற பணிகள் அனுமதிக்கப்படுகிறது.
- பெட்ரோல்/ டீசல் பங்குகள் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படுகிறது.
- பிறமாநிலங்கள் / வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் இ-பதிவு முறை அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

- வங்கிகள், தனியங்கி பணம் வழங்கும் மையங்கள், வங்கி சார்ந்த போக்குவரத்து, கப்பீடு நிறுவன சேவைகள் அதிகபட்சம் 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.
- மைக்ரோ பைனாஸ் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களை நிறுவனத்திற்கோ அல்லது ஓர் பொது இடத்திற்கோ வற்புறுத்தி வரச்சொல்லி பணம் வசூல் செய்வது போன்ற செயல்பாடுகள் அனுமதிக்கப்படமாட்டாது. மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
- மேற்கண்ட விதிமுறைகளை மீறுவோர் மீது பேரிடர் மேலாண்மைச் சட்டம் -2005- ன்கீழ் பிரிவு 51-60 மற்றும் இதச பிரிவு 188 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அபராதம் அல்லது சிறைதண்டனை விதிக்கப்படகூடும்.

**கொரோனா மேலாண்மைக்காக தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு பொதுமக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் கட்டாயம் முக கவசம் அணியவேண்டும். பொதுமக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பு போட்டு கை கழுவுதல் மற்றும் சமூக இடைவெளியினை தவறாமல் கடைபிடித்து அவசியம் இல்லாமல் வீட்டிலிருந்து வெளியில் செல்வதைத் தவிர்த்து தருமபுரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் தடுக்க முழு ஒத்துழைப்பு வழங்க பொதுமக்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்டஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.பி.கார்த்திகா, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**